சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 06.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 11951/E/2024**

திரு.S.Venkata Gurunathan -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், மயிலாப்பூர் வட்டம், சென்னை மாவட்டம். பொது அதிகார அமைப்பு

******

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (06.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.S.Venkata Gurunathan அவர்கள் இன்றைய விசாரணையில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திருமதி.ஜெனிதா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மயிலாப்பூர் வட்டம், சென்னை அவர்கள் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 12.06.2024 |
| **கோரிய தகவல்**, Whether a legal Heir certificate has been issued by your office in the name of late Smt.Subbalakshmi Subramanian, Whether my name S.Venkata Gurunathan, stands included in the said legal heir certificate என குறிப்பட்டு 2 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, வட்டாட்சியர், மயிலாப்பூர், சென்னை அவர்களுக்கு மனு செய்துள்ளார். | |

| | |
|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | ந.க.எண்.அ3/1424/2024, நாள் 13.06.2024 |
| சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 11.07.2024 |
| மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம் | ந.க.எண்.அ3/1739/2024, நாள் 08.08.2024 |
| சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 30.09.2024 |

•••••

- மனுதாரர், தான் கோரிய தகவலுக்கு உரிய தகவல் வழங்கப்படவில்லை என எடுத்துரைக்கிறார்.
- பொதுத் தகவல் அலுவலர், இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் தங்கள் அலுவலக கடித ந.க.எண்.அ3/1424/2024, நாள் 13.06.2024 தேதியிட்டகடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மனுதாரர் காலஞ்சென்ற மனுதாரரின் தாயார் திருமதி.சுப்புலட்சுமி இறந்ததன் பேரில் மனுதாரர் வாரிசு சான்று கோரியுள்ளதாகவும், மேற்படி வாரிசு சான்று தொடர்பான கோப்பு எண் குறிப்பிட்டு தகவல் கோரும் பட்சத்தில் தகவல் வழங்கப்படும் என்ற விவபரம் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் எடுத்துரைக்கிறார்.

2. மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலரின் வாதம் மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் 12.06.2024 தேதியிட்டு சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரிய தகவல் குறித்து 13.06.2024 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவரின் கடிதத்தின் வாயிலாகவும், 11.07.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 19(1)-ன்கீழான மனுவிற்கு 08.08.2024 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு அலுவலரால் மனுதாரருக்கு விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது இன்றைய ஆவண பரிசீலனையில் தெரியவருகிறது.

b) மேலும், வழங்கப்பட்ட தகவல் உரிய தகவல் அல்ல என மனுதாரர் எடுத்துரைத்ததை ஆணையம் பதிவு செய்கிறது.

c) மேற்படி தகவல் குறித்து ஆவணங்களை பரிசீலனை செய்து மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கும் பொருட்டு, காலஅவகாசம் வழங்குமாறு பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தைக் கோரினார்.

d) எனவே, பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள வாரிசு சான்று தொடர்பான தகவலுக்கு உரிய தகவல்களை மனுதாரருக்கு, சட்டப் பிரிவு 7(6)-ன்படி,

கட்டணம் ஏதுமின்றி, அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 05.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 11951/E/2024**
**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மயிலாப்பூர் வட்டம், சென்னை மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.S.Venkata Gurunathan, S/o.Subramanian,
16, (New No.2), I Main Road,
Jeth Nagar, Chennai - 600 028.

Copy to: File MP/PA-